அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.33/95

எனது இல.1/543 ஈ 02 டி/02/94(11)
அரசாங்க நிருவாக,உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்,பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7
1995,நவம்பர் மாதம் 14 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

## அரச சேவையிலுள்ள சம்பள முரண்பாடுகளை அகற்றல்.

1994.07.25 ஆந் தேதிய 27/94 ஆம் இலக்க, 1994.07.25 ஆந் தேதிய 27/94(1)ஆம் இலக்க,1994.08.08 ஆந் தேதிய 29/94 ஆம் இலக்க, 1995.03.20 ஆந் தேதிய 29/94(1)ஆம் இலக்க,1995.04.07 ஆந் தேதிய 29/94(11)ஆம் இலக்க, 1995.06.20ஆந் தேதிய 29/94(111) ஆம் இலக்கம் மற்றும் 1995.04.28 ஆந் தேதிய 14/95 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள் மூலம் 1992.12.24 ஆந் தேதிய 37/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் சில சேவைகள் தொடர்பில் சம்பள மீளமைப்புகள் செய்யப்பட்டன.அதனால் அந்த சம்பள அளவுத் திட்டங்களுக்குரியதான அதையொத்த சில திணைக்கள பதவிகளின் சம்பள அளவுத் திட்டங்களில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

02. அந்த முரண்பாடுகளை அகற்றுவதற்காக இந்தச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பள அளவுத் திட்டங்களை மீளமைப்பதற்கும், அந்த மீளமைப்புகளை 1995.11.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தீர் மானித்துள்ளது.

03. இந்த மீளமைப்புகள் பின்வரும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள் மூலம் சம்பளங்கள் மீளமைக்கப்பட்ட சேவைகளுக்கு ஏற்புடையதாகாது.

(1) திகதி 1994.07.25 இலக்கம் 27/94

(11) திகதி 1994.08.08 இலக்கம் 29/94

(111) திகதி 1995.02.06 இலக்கம் 3/95

04. இலங்கை ஆசிரியர் சேவை தொடர்பிலும் இந்த மீளமைப்பு ஏற்புடையவாகாது.

05. புதிய சம்பளங்களுக்கு இப்போதுள்ள சம்பளங்களை மாற்றியமைத்தல் படி முறை அடிப்படையில் அமைதல் வேண்டும்.

06. இப்போதுள்ள வேதன வேற்றத் திகதிகளில் மாற்றங்கள் ஏற்படாது.

07. 1992.12.24 ஆந் தேதிய 37/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் சம்பள அளவுத் திட்டங்களின் கீழ் விதித்துரைக்கப்பட்டுள்ள வினைத்திறன்காண் தடைப் பரீட்சை-கள் அதற்குரிய புதிய சம்பள அளவுத் திட்டங்களுக்கு நேரொத்த படி நிலைகளில் செயற்படும்.

08. 1992.12.24 ஆந் தேதிய 37/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது கீழ்நிலை உத்தியோகத்தர் அல்லது சிற்றூழியர் என்னும் வரைவிலக்கணம் மறு அறிவுறுத்தல் வழங்கும் வரை மாறாது இருக்கும்.

09. இந்தச் சுற்றறிக்கையின் சம்பள மீளமைப்புக்களை கருதாமல் இணைந்த படிகள் மற்றும் புகையிரதச் சீட்டுகளுக்கான உரித்துகள் 1992.12.24 ஆந் திகதிய 37/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி மறுஅறிவுறுத்தல்கள் வழங்கும் வரை அமையும்.

10. உத்தியோகத்தரின் புதிய சம்பளத்திலிருந்து விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குமான உதவு தொகை அறவிடுதல் 1992.12.24 ஆந் திகதிய 37/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள நூற்று வீதங்களின்படி செய்யப்பட வேண்டும்.

11. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு 1995 ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடுகள் மூலம் அளிக்கப்பட்டுள்ள மீண்டுவரும் ஒதுக்கீடுகளினால் மீளமைக்கப்பட்ட சம்பளங்கள் கொடுப்பனவு செய்ய வேண்டும். மேலதிக ஒதுக்கீடுகள் தேவைப்படுமாயின் அத்தகைய மேலதிக ஒதுக்கீட்டுத் தொகை கணிக்கப்பட்ட முறையை தெளிவுபடுத்தி விண்ணப்பமொன்றை பொது திறைசேரியின் வரவு செலவு பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சு/திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் சேமிப்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்பு அல்லது வரவு செலவுப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து ஒதுக்கீடு பெற்ற பின்புதான் பற்று வைக்கப்பட வேண்டும். உங்கள் ஒதுக்கீட்டுக்கு மேலதிகமான செலவுகளை ஈடுசெய்ய வரவு செலவுப் பணிப்பாளர் நாயகம் நிதி ஒதுக்கமாட்டார் என்பது தெளிவாகக் கவனத்துக்கு எடுக்கப்படல் வேண்டும்.

12. இச்சுற்றறிக்கை திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.